செய்தி வெளியீடு எண்: 249 நாள்: 10.04.2019

<u>பொது (தேர்தல்கள்.3) துறை</u>

## செய்தி வெளியீடு

2019ஆம் ஆண்டு மக்களவைப் பொதுத் தேர்தல்கள் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் இடைத்தேர்தலுக்கான வாக்கு பதிவு 18.04.2019 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை (32.மதுரை மக்களவைத் தொகுதி நீங்கலாக) நடைபெறும். 32.மதுரை மக்களவைத் தொகுதிக்கு காலை 7.00 மணி முதல் மாலை 8.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். மேற்காணும் பொதுத் தேர்தல்கள் / இடைத்தேர்தல்களின்போது, வாக்குப்பதிவிற்கு முந்தைய / பிந்தைய கருத்துக் கணிப்புகளின் முடிவுகளை வெளியீடுதலுக்கும் பரப்புதலுக்கும் பின்வரும் வரையறைகள் பொருந்தும்:-

அ) 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126A ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்சொன்ன பிரிவின், (2)(b)ஆம் உட்பிரிவின் விதித்துறைகள் தொடர்பாக, இந்திய தேர்தல் ஆணையம், 11.04.2019 காலை 7.00 மணியிலிருந்து 19.05.2019, மாலை 6.30 மணி வரையிலான கால அளவை 2019ஆம் ஆண்டு நடப்பு மக்களவைப் பொதுத் தேர்தல்கள் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் இடைத்தேர்தல்கள் தொடர்பாக, வாக்குப்பதிவிற்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவது மற்றும் அதனை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவது அல்லது வேறு ஏதேனும் முறையில் பரப்புவது (அது எதுவாயினும்) ஆகியவை தடை செய்யப்பட வேண்டிய கால அளவாக இதனால் அறிவிக்கிறது என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆ) 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126 (1) (b) ஆம் பிரிவின் கீழ், 2019ஆம் ஆண்டு மக்களவைப் பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்கள் தொடர்பாக ஒவ்வொரு கட்ட தேர்தல்களின் வாக்குப்பதிவு முடிவடைவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்துடன் முடிவடைகின்ற 48 மணி நேர கால அளவில் ஏதேனும் கருத்துக் கணிப்பு அல்லது பிற வாக்குப்பதிவு ஆய்வு முடிவுகள் உட்பட, எந்தவொரு தேர்தல் விவகாரங்களையும், எந்தவித மின்னணு ஊடகத்தில் காட்சிப்படுத்துவது தடை செய்யப்படும் என்பதை இந்திய தேர்தல் ஆணையம் மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9